REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] பதிப்பு: மார்கழி 1உ சனி (15—12—56) ★ ★ வெளியீடு: மார்கழி 2உ ஞாயிறு (16—12—56) [இதழ் 162

சிறைக் கைதிகளுக்கு கிறிஸ்துமஸ் 'விடுமுறை'

லண்டன், டிச. 14—

பிரிட்டிஷ் சிறைகளில் உள்ள கைதிகள், கிறிஸ்துமஸ் திரு விழாவின்போது வீடு சென்றுவர அனுமதிக்கும் திட்டம் ஒன்றினை சர்க்கார் அமுலாக்கவிருக்கிறதாம்!

சென்ற ஆண்டில் ஐந்து ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியும் இதுபோன்று கிறிஸ்துமஸ் விழாவிற்காக வீட்டிற்கு அனுப்பப் பட்டனர் என்றும், அதனை முன்மாதிரியாகக்கொண்டு இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

'பக்ஷிகுலாம் சர்க்கார் இராஜிநாமாச் செய்ய வேண்டும்'

'காஷ்மீரில் புதிய தேர்தல் நடத்துக'

'இந்தியப் பேரரசு 1953-ல் தந்த உறுதிமொழியைச் செயலாற்றுக'

சிறையில் வாடும் ஷேக் அப்துல்லா கோரிக்கை

கராச்சி, டிச. 13—

"காஷ்மீரில் பக்ஷிகுலாம் முகம்மது தலைமையில் உள்ள சர்க்கார் இராஜிநாமாச் செய்யவேண்டும்; காஷ்மீர் பிரச்சினையின்மீது, மீண்டும் தேர்தல் நடத்தவேண்டும்" என்று சிறையில் வாடும் முன்னாள் பிரதமரான ஷேக் அப்துல்லா, ஜம்மு—காஷ்மீர் அரசியல் நிர்ணய சபைத் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளதாகத் தெரியவருகிறது.

'காஷ்மீரில் இப்போது ஜனநாயகம் நிலவவில்லை' என்று இந்திய மக்கள் சபையில், பி. சோ. உறுப்பினர்களாயிருக்கும் அசோக் மேதாவும், எச். வி. காமத்தும் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறாராம், ஷேக் அப்துல்லா!

'காஷ்மீர் விவகாரத்தைத் தீர்க்க, சுதந்திரமான—நியாயமான வாக்கெடுப்பு நடத்துவோம்' என்று, 1953-ல் இந்திய சர்க்கார் உறுதி தந்திருக்கின்றனர் என்பதையும் ஷேக் அப்துல்லா சுட்டிக்காட்டியிருக்கிறாராம்!

சம்பள உயர்வு கோருவோருக்கு காமராசர் பட்டை நாமம்!

சென்னை, டிச. 14—

சம்பள உயர்வு கோருவோருக்குப் பட்டை நாமம் சாத்தும் வகையில் முதன் மந்திரி காமராசர் பேசியிருக்கிறார்.

'சம்பள உயர்வு மட்டும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவிடாது' என்று கூறியிருக்கிறார், அவர்!

"நல்ல வீடு, இலவசக் கல்வி, இலவச மருத்துவ வசதி போன்றவை பலவும் செய்துதர நடவடிக்கை எடுத்தால்தான் வாழ்க்கைத்தரம் உயரும்; சம்பள உயர்வு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாது"

என்று, எட்டாவது ஆண்டு சமூக சேவா மாநாட்டினை ஒட்டி ஒரு கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் அவர் குறிப்பிட்டாராம்.

சர்க்கார் இதுவரை ஊழியர்களுக்கு வழங்கியுள்ள சிறு சிறு உதவிகளை மிகப் பிரமாதப்படுத்திக் கூறிவிட்டு, அவர் மேலும் கூறியுள்ளதாவது:—

"பணக்காரர்கள்தான் சமுதாயத்தில் அதிகம் மதிக்கப்படுகின்றனர் என்று ஒரு எண்ணம் ஏழைகளிடத்தில் நிலவுகிறது; இது சமூக முன்னேற்றத்திற்கு மிகவும் ஆபத்தான எண்ணமாகும். எனவே, தொழிலாளர்களும், சமூகத்தில் பணக்காரர்களைப்போல சம அந்தஸ்து உடையவர்கள் என்றே கருதப்படவேண்டும்."

சர்க்கார் ஊழியர்களின் சம்பளமும் உதவித் தொகையும்

ஒரு புள்ளி விவரம்

சென்னை, டிச. 13—

1955-56-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளமாகவும், உதவிச் சம்பளமாகவும் மொத்தம் ரூ 13 76,04 000 கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1956 மார்ச் திங்களில் மொத்தம் 1,82 076 அரசாங்க ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்; அவர்களில் 1,18,160 பேர் அமைச்சர் இலாகாவிலும் மற்றும் உயர்தர இலாகாக்களிலும், 59 897 பேர் கிராம நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர்.

சென்னை மாநிலத்தில் மொத்தம் 27,506 பேர்கள் உதவிச் சம்பளம் (பென்ஷன்) பெற்று வருவதாகவும், அவர்களுக்கு உதவிச் சம்பளமாக 1955-56-ம் ஆண்டில் ரூ. 1,74 59 000 கொடுத்துள்ளதாகவும் அறிக்கை ஒன்றில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவிலுள்ள எல்லா ஜப்பானியப் போர்க் கைதிகளும் கொஞ்சங் கொஞ்சமாக விடுதலையடைந்து வருகின்றனராம்.

காஷ்மீரில் அன்னியப் படைக்கு இடமுண்டா?

புதுடில்லி, டிச. 13—

'இந்தியப் பகுதியான காஷ்மீருக்குள் எந்த அன்னியப்படையும் வரும் பேச்சுக்கு இடமே கிடையாது' என்று பண்டித நேரு மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

போலந்தில் 'களை எடுப்பு'

மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குச் 'சீட்டு'

வார்சா, டிச. 14—

போலந்து நாட்டில் 'களை எடுப்பு'த் தொடர்ந்து நடைபெறுவதாகத் தெரிகிறது.

'ஸ்டாலினிஸ்டு'கள் என்று கூறப்பட்டுப் பலர், முக்கியமான பதவிகளிலிருந்து வெளியேற்றப்படுகின்றனராம்!

'பிரான்சிஸ் ஜெக்மாஜூர், அல்பிரெச்ட் என்ற இருவர் முக்கியமான இரு பதவிகளிலிருந்து, ஸ்டாலினிஸ்டுகள் என்ற காரணத்திற்காக வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்,' என்று போலந்து செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தந்திருக்கிறதாம்.

மாஜூர், தொழிலாளர் கட்சி மத்திய கமிட்டியின் போலிட் பீரோவில் உறுப்பினராக இருந்து, பின்பு போலந்து தலைமை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் இருந்தாராம்; அவர், இன்று பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாராம்!

அல்பிரெச்ட், கிழக்கு ஜெர்மனிக்கு போலந்தின் தூதுவராக இருந்தாராம்!

டில்லி எதேச்சாதிகாரத்தின் எதிரொலி!

மகா குசராத் ஆர்ப்பாட்டக்காரர்களால் மந்திரி தாக்கப்பட்டாராம்

போலீசார் 4 முறை கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனராம்

அகமதாபாத், டிச. 14—

டில்லிப் பேரரசின் எதேச்சாதிகார எதிரொலி இன்னும் குஜராத்திப் பகுதிகளில் கேட்கிறது.

மகா குஜராத் கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள், பம்பாய் சமூக நல இலாகா மந்திரியான திருமதி இந்துமதி சிமன்லால் என்பவர், இங்குள்ள பெண்கள் சங்கக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்தபோது, அவரை தங்கள் கொடிக் கம்புகளாலும் கற்களாலும் தாக்கிக் காயப்படுத்தியதாக செய்தி ஒன்று தரப்படுகிறது.

கைகலப்பு

'ஜோதி சங்கம்' என்ற அந்தப் பெண்கள் நிறுவன வாயிலை மந்திரி அடைந்தபோது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களுக்கும் சங்கத்துப் பெண்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டதாம்.

காயங்களுடனேயே மந்திரி இந்துமதி, கூட்டத்தில் பேசினாராம்.

கருப்புக் கொடி

அவர் பேசிக்கொண்டிருந்தபோது, கருப்புக் கொடிகளுடன் ஆர்ப்பாட்டத்திலீடுபட்டிருந்தவர்கள், கீச்சுக் குரலில் கேலி மொழிந்தனராம்!

பின்னர் மந்திரி வெளிவந்தபோது போலீசார் மந்திரிக்குப் பாதுகாப்புத் தந்திருக்கிறார்கள்.

கண்ணீர்ப் புகை

மந்திரி சென்ற பின்னும், ஒரு போலீஸ் நிலையத்தைச் சுற்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த கூட்டத்தைக் கலைக்க போலீசார் 4 முறைகள் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பிரயோகித்தனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில் வட்டிக்குக் கடன் தரும் பட்டாணியர்!

புதுடில்லி, டிச. 12—

1955-ம் ஆண்டில் திடீரெனப் புள்ளி விவரங்களை சேகரித்ததில் இந்தியாவில் மொத்தம் 5,754 ஆப்கானியர் இருப்பதாகத் தெரிய வந்ததாம்!

இவர்களில் 95 சதவிகிதத்தினர் வட்டிக்குப் பணம் கடன் கொடுத்துப் பிழைக்கிறார்கள் என்று மக்கள் சபையில் அமைச்சர் தத்தார் தெரிவித்துள்ளார்.

குறைந்த ஊதியம் பெறும் சர்க்கார் ஊழியர்களுக்கு...

ரூ. 12 சம்பள உயர்வு தருவதுபற்றி யோசனை

புதுடில்லி, டிச. 14—

மாநில சர்க்கார்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களில் மிகக் குறைவாக ஊதியம் பெறுவோருக்கு சம்பள உயர்வு தரும் திட்டம்பற்றி டில்லி சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருக்கிறதாம்.

சம்பளம், மற்றும் கிராக்கிப் படி போன்றவை எல்லாம் சேர்த்து ரூ 100-க்கும் குறைவாக மாத ஊதியம் பெறுவோருக்கே ரூ. 12 வரை ஊதிய உயர்வு தரப்படும் என்றும், இதற்கே, ஆண்டுதோறும் ரூ 30 கோடிவரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

ஏற்கனவே உள்ள திட்டப்படியே, இந்தச் செலவினை, மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்வதானல், டில்லி 50 சதவிகிதச் செலவை ஏற்கவேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படித் தரப்படும் ஊதிய உயர்வு, அடிப்படைச் சம்பள உயர்வாகவோ, கிராக்கிப் படி உயர்வாகவோ உபகாரச் சம்பளம் வழங்குவதற்குக் கணக்கிடப்படக் கூடாதெனவும், தனியாகத் தரப்படும் ஊதியம் என்றே கருதப்படவேண்டும் என்றும் கூறப்படுகிறது

'பல்லாயிரக்கணக்கில் வேலையிலிருந்து துரத்துவோம்'

தொழிலாளரை மிரட்டுகிறது, காதரின் 'சோஷலிஸ்டு' சர்க்கார்!

வியன்னா, டிச. 14—

'பல்லாயிரக்கணக்கானோரை வேலையிலிருந்து நீக்குவோம்' என்று தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் ஹங்கேரி தொழிலாளர்களை, காதர் தலைமையில் உள்ள 'சோஷலிஸ்டு' சர்க்கார் மிரட்டியிருக்கிறதாம்!

'தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் வேலை பறிபோகும்' என்று தங்களுக்கு எதிராகத் திரண்டெழுந்துள்ள தொழிலாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாம், காதர் சர்க்கார்!

'வேலை நிறுத்தம் நீடித்தால் நாடு 'பாப்பராகி'விடும்; பணவீக்கம் தவிர்க்கமுடியாததாகிவிடும்,' என்றும் எச்சரிக்கை கூறுகிறதாம்!

மூன்று பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

கோவாவின் மத்தியில் உள்ள கிராமத்தில் போர்ச்சுகீசிய போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மூன்று பெண்களைக் கொன்றுவிட்டனராம்; மற்றும் மூவருக்குக் காயம் ஏற்பட்டதாம். இறந்தவர்கள், தலைமறைவாகவிருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

நம் நாடு

ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—12—'56 சனி

விளம்பரம் தேடு படலம்!

பொதுவாக இந்தியத் துணைக் கண்டம் விடுபட்ட நாள் முதற்கொண்டும், குறிப்பாக இந்தியப் பேரரசின் கதாநாயகராக பண்டிதர் நடிக்கத் தொடங்கினது முதற்கொண்டும், இப்பரந்தத் துணைக் கண்டத்தின் சிறப்புகளைப் பிற நாட்டவர்களுக்கு உணர்த்துவது—பிற நாட்டு மக்களிடம் நெருங்கிய தொடர்பை உருவாக்குவது என்ற பெயரில், பண்டிதரின் புகழைப் பரப்ப, கலாச்சாரத் தூதுக் குழுக்களை அனுப்புவதை, இன்றியமையாப் பெரும் பணிகளில் ஒன்றாக இந்தியப் பேரரசு செயலாற்றி வருகிறது. இத்துறைக்கென, பெருந்தொகையையும் பாழாக்கி வருகிறது.

உள்நாட்டு மக்களுக்கு வாழ்க்கை வசதிகளைத் தேடித் தருவதில் இருக்கும் அக்கறை கயக்காட்டிலும், கலாசாரத் தூதுக் குழுக்களை அனுப்பி தண்டச் செலவு செய்வதில் இந்தியப் பேரரசிற்கு அதிக அக்கறை இருக்கிறது.

இந்தியப் பேரரசு கலாச்சாரத் தூதுக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், வெளிநாடுகளிலிருந்து இங்கு கலாச்சார தூதுக்குழுக்கள் வருவதுடன் இருந்துவிடாது, பலவகைத் தொழில்களில் நிபுணத்துவம் பெற்றுள்ள பல்வேறு தொழில் நிபுணர்களும் இங்கு வருகின்றனர். இந்தியப் பேரரசு அவர்களை வருந்தி அழைத்து வரவேற்கிறது.

இங்கிருந்துகலாச்சார தூதுக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதினாலும், வெளிநாட்டுக் காலாச்சாரத் தூதுக் குழுக்களை இங்கு வரவேற்பதினாலும், இந்தியத் துணைக் கண்ட மக்களுக்கு இதுவரை காதொடிந்த ஊசியளவும் பயனேற்பட்டதாகத் தெரியவில்லை. இப்பயன் குறித்து இந்தியப் பேரரசு இதுவரை மதிப்பிட்டுக் கணக்கிட்டதாகவும் சொல்வதற்கில்லை.

இக்கலாச்சாரப் பரிமாற்றம் இல்லாமலும், இதற்கெனச் செலவழிக்கப்படும் பணச் செலவிற்கு இடமில்லாமலும், இந்தியத் துணைக்கண்டத்திற்கும் பிறநாடுகளுக்கும் நட்புறவு ஏற்படுத்துவதற்கு மார்க்கம் கிடையாதா? தங்கள் நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் நெருக்கமான உறவைத் தேடுகிறோம் என்று கூறிக்கொண்டு, இதுவரை முன்னேற்றம் பெற்றுள்ள எந்த ஒரு நாடாவது, இந்தியப் பேரரசுபோல் நடந்துகொண்டிருக்கிறதா?

இந்தியப் பேரரசுபோல் கலாச்சாரத் தூதுக் குழுக்களை அனுபபிக் கொண்டிராத நாடுகள், மற்ற நாடுகளுடன் நட்புறவு கொள்ளாது பகைபட்டுக் கிடக்கின்றன எனக் கூறுவதற்கு இடமில்லை. அதுவுமின்றி, கலாச்சாரத் தூதுக் குழுக்களை ஏற்றுமதியும் இறக்குமதியும் இந்தியத் துணைக் கண்டம்போல் செய்யத் தவறிவருகின்ற காரணத்தினால், மற்ற நாட்டு மக்களின் சிறப்பியல்புகளை குறிப்பிட்ட ஒருநாட்டு மக்கள் அறிந்து கொள்ளாது இருட்டறையில் இருக்கிறார்கள் எனக் கொள்வதற்குமில்லை.

முன்னேறியுள்ள மற்ற மேல் நாடுகள் போன்று, இந்தியத் துணைக் கண்டமும் தொழில் வளத்திலும், மக்கள் வாழ்க்கைத் தரத்திலும் குறைந்தபட்ச முன்னேற்றத்தையாவது பெற்ற பிறகு, இத்தகையக் கலாச்சாரத் தூதுக் குழுக்களை அனுப்ப முன் வந்தாலாவது, அதில் ஏதாவது பொருள் இருக்கக்கூடும். அது வரவேற்கத்தக்கது என அறிஞர்களால் பாராட்டப்படவும் கூடும்.

இங்கு போடப்பட்டுள்ள ஒவ்வொரு சிறு தொழில் திட்டங்களுக்கும்கூட, வெளிநாட்டு மூலதன உதவிக்குக் கையேந்திக்கிடக்கும் பரிதாப சூழ்நிலையில், கலாச்சாரத் தூதுக் குழுவை பெரும் பணச் செலவில் பிறநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் பிள்ளை விளையாட்டை மேற்கொள்ளுவதில் இந்தியப் பேரரசு ஆர்வம் காட்டுகிறது என்றால், அவ்விபரீத விளையாட்டை அனைவரும் கண்டிக்கத்தான் செய்வர்.

மக்கள் கொடுக்கும் வரிப் பணத்தின் ஒவ்வொரு அணுவும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அரும்பெரும் தொழில் ஏற்பாடுகளில் செலவழித்துத் தீரவேண்டிய கட்டாயம் இருக்கும் பொழுது, பிறநாடுகளுக்குக் கலாச்சாரத் தூதுக் குழுக்களை அனுப்பும் பணியில் இந்தியப் பேரரசு தீவிரமாக ஈடுபட்டுப் பணத்தை விரயமாக்கிக்கொண்டிருப்பது, அதை வன்மையாகக் கண்டிப்பதற்கான இன்றியமையாமையை மிகுதியாக்குகிறது.

இப்படி கலாச்சாரத் தூதுக் குழுக்களை அனுப்புவதிலாவது, இந்தியப் பேரரசு தென்னிந்திய கலைஞர்களை மதித்து நடக்கின்றதா என்றால், அந்தக் கேடும் இல்லை. அனைத்திலும் தென்னாட்டை ஒதுக்கித் தள்ளுவதைப் போன்றே, இதிலும் தென்னாட்டைப் புறக்கணித்து நடந்து கொள்வதில் முன்னணியில் இருந்து வருகிறது.

தென்னாட்டுக் கலைஞர்கள் விஷயத்தில் இந்தியப் பேரரசு காட்டிவரும் அலட்சியத்தை, ஏற்கனவே பலமுறை நமது கலைஞர்கள் சுட்டிக் காட்டிக் கண்டித்துள்ளனர்.

கலாச்சாரத்தூதுக்குழுக்களில் இதுவரை இடம் பெற்றிருந்த கலைஞர்கள் குறித்து இந்தியப் பிரதமர் மக்கள் சபையில் விளக்கம் தந்துள்ளார். அக்கலைஞர்களை 'அழுக்காறு' கொண்டவர்கள் என அவர் அர்ச்சித்துள்ளார்.

இந்தியப் பிரதமரின் வெளிப்படையான அர்ச்சனைக்கு, நமது சிறந்த கலைஞர்கள் உள்ளாக்கப்படாமல் போனது குறித்து நாம் பெரிதும் மகிழ்கிறோம். அவருடைய பாராட்டும் பழிச்சொல்லும் நமது கலைஞர்களுக்கு இனி எப்பொழுதும் வேண்டவே வேண்டாம் என்றுகூட நாம் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தியப் பிரதமரின் அர்ச்சனையிலிருந்து ஒரு உண்மை நன்கு விளக்கமாகிறது. அதாவது வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த கலாச்சாரத் தூதுக் குழுக்களில், உண்மையான கலைஞர்கள் இடம் பெறவில்லை என்பதும், இடம் பெற்றவர்களில் பெரும்பான்மையினர் காங்கிரஸ் அமைச்சர்கள் அரசாங்க அதிகாரிகள் ஆகியவர்களின் அன்புக்கும் ஆதரவிற்கும் பாத்திரமானவர்கள் என்பதும் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

இந்த உண்மை வெளிநாட்டுத் துணை அமைச்சரின் மனைவியும், மற்றொரு நெருங்கிய உறவினரும் கலாச்சாரத் தூதுக் குழு ஒன்றில் இடம் பெற்றிருந்தத் தகவல் ஒப்புக் கொள்ளப்பட்டதிலிருந்து உறுதி செய்யப்படுகிறது. கலாச்சாரத் தூதுக் குழுவில் இடம் பெறுகிறவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தகுதி ஒன்று மட்டுமே இருந்தாக வேண்டும என்ற நிலை இருக்கிறபொழுது, நமது நாட்டுக் கலைஞர்கள் அக்குழுக்களில் இடம் பெறாது விடுபட்டுப் போனதில் வியப்பொன்றுமில்லை.

கலாச்சாரத் தூதுக்குழுக்கள் அனுப்புதல் வெறும் விளமபரம் தேடும் படலமாகும் என்பதில் ஐயமில்லை. அந்த ஒன்றுக்கும் இதுவரை அனுப்பப்பட்டுள்ள தூதுக் குழுக்கள் தகுதியற்றவை என ஏற்பட்டுவிட்டது. எனவே, வெளிநாடுகளில் சொந்தத்திற்கு விளம்பரம் தேடும் இப்படலத்தை உடனடியாக இந்தியப் பிரதமர் கைவிட்டாக வேண்டும்.

கைத்தறித் தொழிலின் எதிர்காலம்

டில்லி அமைச்சர் கணிப்பு

புதுடில்லி, டிச. 13—

"கைத்தறிக்கும் கைவேலைத் தொழில்களுக்கும் மகத்தான எதிர்காலம் இருக்கிறது.

"நமது கைத்திறனைப் பாதுகாக்க விரும்பினால் கைத்தறி போன்ற கைவேலைத் தொழில்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். சொந்த பலத்தைப் பொறுத்துத்தான் அதன் எதிர்காலம் இருக்கிறது,"

என்று இந்திய கைத்தறி போர்டின் கூட்டத்தில், மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், அத்தொழிலின் பல்வேறு பிரச்சினைகளை உணராமல் இருந்தால் தவிர, அத்தொழிலைப் பாதிக்கக்கூடிய அபாயம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

'இயந்திரங்களும் தேவையானதே; ஆனால், நாமே இயந்திரங்களாகிவிடக்கூடாது. கைத்தறியும் ஆலையும் ஒன்றுக்கொன்று எதிரிகளாகத் தோன்றும் நிலை கூடாது."

உழைக்காது கிடைத்த வருமானந்தானே!

திருமலை ஏழுமலையானுக்கு நவம்பர் மாதம் ரூ 1,27,754-15-0 இந்திய நாணயங்களும், ரூ. 210-10-0 ஐதராபாத் ஹாலி நாணயங்களும், ரூ. 176 தோலா எடை தங்கமும், ரூ 2,222 தோலா எடை வெள்ளியும், ரூ 651-8-0-க்கு பழைய ஜியார்ஜ், இராணி ரூபாய்களும், ரூ 400 மதிப்புள்ள இருடன் பத்திரங்களும் வருமானமாகக் கிடைத்துள்ளதாம்.

பொதுத் தேர்தல் தேதிகள்

1957 பிப்ரவரி 25-ந் தேதி முதல் மார்ச் 12-ந் தேதிக்குள் நடைபெறும்

தேர்தல் அதிகாரி சுகுமார் சென் அறிவிப்பு

புதுடில்லி, டிச 13—

1957 பிப்ரவரி 25-ந் தேதிமுதல் மார்ச் 12-ந் தேதிக்குள், இந்தியாவெங்கணுமுள்ள மாநில சட்டசபைகளுக்கும் டில்லி மக்கள் சபைக்கும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும் என்றும், மார்ச் 31-ந் தேதிக்குள் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் அதிகாரி சுகுமார் சென் கூறியிருக்கிறார்.

சில இடங்களில்

உத்திரப் பிரதேசத்தின் இமாலய மலைப் பகுதிகளிலும் பனி படிந்த இமாசலப் பிரதேசத்திலும் மட்டும் ஏப்ரல் அல்லது மே திங்களில்தான் தேர்தல்கள் நடத்தப்பட முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஜனவரி மூன்றாவது கிழமையில் தேர்தல் நடத்துவதற்கான உத்தரவுகள் இந்தியா முழுமைக்குமாக ஏககாலத்தில் பிறப்பிக்கப்படும என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அபேட்சைப் பத்திரங்கள்

அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பத்து நாட்களுக்குள் அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் தெரியவருகிறது.

காஷ்மீரில்

காஷ்மீரில் தேர்தல் நடைபெறாது என்றும், காரணம் காஷ்மீருக்கென தனித் தேர்தல் சட்டங்கள் இருக்கின்றன என்றும், மக்கள் சபையில் காஷ்மீருக்கான ஆறு பிரதிநிதிகள் காஷ்மீர் சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் குடியரசுத் தலைவரால் நியமனம் பெறுவர் என்றும் சென் தெரிவித்திருக்கிறார்.

தெலிங்கானாவில்

ஆந்திரப் பிரதேசத்தில் தெலிங்கானா பகுதியில் மட்டுமே தேர்தல் நடைபெறும் என்றும், முன்னைய ஆந்திர மாநிலப் பகுதியில் தேர்தல் நடைபெறாது என்றும் அவர் தகவல் தந்துள்ளார்.

காரணம் என்னவென்றால், ஆந்திர மாநிலத்தில் கடந்த 1955 மார்ச் திங்களில் தான் தேர்தல் நடைபெற்றது என்றும், அந்த உறுப்பினர்களின் பதவிக் காலம், 1962-ம் ஆண்டு வரை வழக்கமான 5 ஆண்டுகளுக்கு அதிகமாக இரண்டாண்டுகள் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது என்றும், என்றாலும், மக்கள் சபைக்கான தேர்தல் ஆந்திரப் பிரதேசம் முழுவதும் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் சென்ற பொதுத் தேர்தலின்போது மொத்த வாக்காளர்களில் 51.5 சதவிகிதம் போதான் வாக்குரிமையைப் பதிவு செய்துள்ளனராம்.

வரும் பொதுத் தேர்தலில் இந்தியாவில் வாக்குரிமை பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 20 கோடியென்றும், அவர்கள் மக்கள் சபைக்கு 500 பேர்களையும், மாநில சட்டசபைகளுக்கு 3,102 பேர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் பிரதம தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

சென்ற பொதுத் தேர்தலின் போது தேர்தலில் 14 கட்சிகள் போட்டியிட்டனவாம்; வரும் தேர்தலில் 4 கட்சிகளே அகில இந்திய கட்சிகளாக உள்ளனவாம். மாநிலங்களில் மட்டும் தகுதிபெற்ற கட்சிகள் 11-தானாம்!

51 கோடி வாக்குப் பதிவுச் சீட்டுகள் அச்சடிக்கப்படுகிறதாம்!

சென்ற பொதுத் தேர்தலில் 60 கோடி வாக்குப் பதிவுச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டனவாம் அதில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படமுடியாமல் போய் விட்டதாம்.

வரும் தேர்தலுக்காக 51 கோடி வாக்குப் பதிவுச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு வருகிறதாம்.

28,75,000 வாக்குப் பதிவுப் பெட்டிகளாம்!

வரும் தேர்தலில் மரத்தால்செய்யப்பட்ட பெட்டிகள் இருக்காதாம்!

சென்ற தேர்தலில் 1,11 095 மரப்பெட்டிகள் பயன்படுத்தப்பட்டனவாம்!

வரும் தேர்தலுக்கு 4,30,000 இரும்புப் பெட்டிகள் புதிதாகத் தயாரிக்கப்பட்டு வருகிறதாம்; அதனுடன் சேர்த்து மொத்தம் 28,75 000 வாக்குப் பதிவு பெட்டிகள் இருக்குமாம்!

தேர்தல் செலவு எவ்வளவு?

சென்ற பொதுத் தேர்தலில் மொத்தம் ரூ. 10 கோடி செலவு செய்யப்பட்டதாம்! அப்போது முதல் தடவையாக வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்குவேறு செலவாயிற்றும்!

வரும் பொதுத் தேர்தலில் செலவு மிகவும் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

2-இலட்சம் வாக்குப் பதிவுச் சாவடிகளாம்!

வரும் பொதுத் தேர்தலில் மொத்தம் 2-இலட்சம் வாக்குப் பதிவுச் சாவடிகள் அமைக்கப்படுமாம்! 1-இலட்சம் பேர் வாக்குப் பதிவு வேலைகளைக் கவனித்து வருவார்களாம்!

சில ஆயிரம் பேர் அநேகர் அல்லவாம்!

புதுடில்லி, டிச 12—

சில ஆயிரம் பேர், ஏராளமானோர் என்று கருதப்படக்கூடாதாம்! மத்திய மந்திரி ஒருவர் கூறியிருக்கிறார், அப்படி!

'பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்து, தங்களின் 'பெர்மிட்' காலம் முடிந்த பின்னும் தங்கிக்கொண்டிருக்கும் முஸ்லீம்களின் எண்ணிக்கை எவ்வளவு?' என்று கேட்கப்பட்டபோது, மக்கள் சபையில், உள்நாட்டு மந்திரி தத்தார், 'ஏராளமானவர் அல்ல; சில ஆயிரம் பேர் தான் அப்படியிருக்கின்றனர்' என்று பதில் கூறினாராம்!

'சில ஆயிரம் பேர் ஏராளமானவராக மாட்டார்கள் என்றால், ஏராளமானவர் என்பதின் மதிப்பீடுதான் என்ன?' என்று சபைத் தலைவர் கேட்டிருக்கிறார்.

ஆனால் அந்தக் கேள்விக்கும் மந்திரி, 'அநேகம் பேர் அல்ல; சில ஆயிரம் பேர்தான்' என்றே பதிலளித்தாராம்!

காஷ்மீர் பிரிவினைக்கு பாகிஸ்தான் சம்மதம்?

டாக்கா, டிச 11—

'ஐ. நா. கூறினால் தற்போதன்படி காஷ்மீர் பிரிவினைக்கு ஒப்புக்கொள்ள பாகிஸ்தான் தயார்' என்று பாகிஸ்தான் பிரதமர் மாணவர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

காரணம் கூறவில்லையே!

புதுடில்லி, டிச. 13—

வாரம் இருமுறை கல்கத்தாவிலிருந்து புதுடில்லி வரை ஓடும் 'ஏர்கண்டிஷன்' இரயில், இதர இரயில்களைப் போன்று இலாபகரமானதாக இல்லை என்றும், ஒரு முறையில் சராசரியாக ரூ 6,500-தான் வசூல் ஆகிறதென்றும், உதவி இரயில்வே மந்திரி ஷா நவாஸ்கான், மாநிலங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

'ஹங்கேரி சம்பவங்கள் - அன்னியர் தூண்டுதல் அல்ல'

'ஆதிக்கக் கூட்டத்திற்கு எதிரான மக்கள் கிளர்ச்சியே'

ஐ. நா. சபையில் யூகோ பிரதிநிதி முழக்கம்

அன்னியர் தூண்டுதல் என்ருல் ரஷ்யா நிரூபிக்கட்டும்

'எங்களுக்கு உண்மைகள் தெரிய வேண்டும்' என்கிருர் இலங்கைப் பிரதிநிதி

'ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் எந்த ரூபத்திலும் அன்னியர் தலையீட்டை நாங்கள் எதிர்க்கிறேம்; இது ஹங்கேரிக்குப் பொருந்தும்.

"ஆனல்...! அதே நேரத்தில் 'ஹங்கேரி மக்களின் கிளர்ச்சி, அன்னிய ஏஜெண்டுகளின் தூண்டுதலால் ஹங்கேரி மக்களில் ஒருசாரார் சென்ற தவருன வழியின் விளைவுதான்,'—என்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டதே இல்லை."

"ஒரு அடக்குமுறைக் கூட்டத்திற்கு எதிராக மக்களில் பெரும்பாலானேர் திரண்டெழுந்து போராட்டம் நடத்துகிருர்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமே இல்லை.

என்று, ஐ. நா. சபையில் யூகோ பிரதிநிதியாக உள்ள டாக்டர் மினாடன் ஞவெ வோவிக் என்பார் ஹங்கேரி பற்றிய விவாதத்தின் போது குறிப்பிட்டிருக்கிருர்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:—

"உலகெங்கிலும் தோன்றியுள்ள ஆழ்ந்த கவலையை போக்கக் கூடியதாயில்லை, ஹங்கேரியில் அண்மையில் நடைபெற்றுவரும் சம்பவங்கள்!

நம்பினேம்

"ஹங்கேரியில் சாதகமான திசையில் சம்பவங்கள் திரும்புவதைக் காணமுடியும் என்று நாங்கள் நம்பினேம். காதர் சர்க்கார், 'பெரும்பகுதி மக்களின் பிரதிநிதிகளது ஆதரவைப்பெற முயற்சிக்கும்; ரஷ்யத் துருப்புகளை வெளியேற்ற : பேச்சுவார்த்தை துவக்கும்' என்றெல்லாம் நம்பினேம்; ஆனல் எங்கள் நம்பிக்கை, துரதிருஷ்டவசமாகச் சீர்குலைந்துவிட்டது.

நடு நிலைமை

"20 மேலை நாடுகள் ஒன்று சேர்ந்து கொண்டுவந்துள்ள தீர்மானம், நெருக்கடியைத் தணிப்பதற்கு மாருக அதிகப்படுத்தும்; ஆசிய நாடுகளின் தீர்மானம், கோரிய பலனைத் தரப்போவதில்லை; எனவே, எந்தத் தீர்மானத்தையும் நாங்கள் ஆதரிக்காமல் நடுநிலை வகிப்போம்."

இலங்கைப் பிரதிநிதி

ஐ. நா. சபையில் பேசிய இலங்கைப் பிரதிநிதி வெகு அருமையான வாதம் புரிந்திருக்கிருர். ஆர். எஸ். எஸ் குணவர்த்தனே என்ற அவர் கூறியதாவது:—

"இன்று உலகம் ஒரு பெரிய நெருக்கடியைச் சமாளிக்கவேண்டியுள்ளது. நாம் மிகவும் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். சூழ்நிலையைக் கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டும்.

"ஐ. நா.-வில் உறுப்பினராயுள்ள ஒரு நாட்டின் நிலைகுறித்து நாம் இன்று ஒரு அறவழித் தீர்ப்பு கூறவேண்டியிருக்கிறது. எனவே, நாம் வெகு நியாயமாக நடந்துகொண்டாகவேண்டும்.

பிரச்சினைகள் என்ன ?

"அத்தகு ஒரு தீர்ப்பு கூறுவதற்குமுன், பிரச்சினைகளை நாம் இந்த சபைமுன் தெளிவாக வைத்தாகவேண்டும்.

'உலகத்தை நிலைகுலையச் செய்யும் அளவுக்கு ஹங்கேரியில் படுகொலை நிகழ்ந்திருக்கிறது என்பதை ரஷ்யாவோ அதன் நண்பர்களோகூட மறுக்கவில்லை

"ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிருர்கள்; அங்கு குழப்பமான நிலை இருக்கிறது என்பதையும் எவரும் மறுக்கவில்லை; ஒப்பியிருக்கிருர்கள் அங்கு மக்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படவில்லை என்பதும் ஒப்பப்பட்டிருக்கிறது.

"இவை ஒத்துக்கொள்ளப்பட்ட பின் சபை 'இவற்றிற்கெல்லாம் பொறுப்பாளி யார்' என்பதைக் கண்டு பிடித்தாகவேண்டும்

"அந்த இடத்திலேயே சென்று ஐ. நா. பார்வையாளர்கள் விசாரித்து நிலைமைகளை அறியவேண்டும் என்று ஐ. நா. தீர்மானித்ததற்கே அதுதான் காரணம்.

நிரூபிக்கட்டுமே !

"இந்தப் புரட்சி அன்னிய ஏஜெண்டுகளால்தான் தூண்டப்பட்டது—நடத்தப்பட்டது என்ற குற்றம் சாட்டுவார்களேயாஞல், ரஷ்யாவும் ஹங்கேரியும் அதனைத் தெளிவான சான்றுகளுடன் நிரூபிக்கட்டுமே! செய்வார்களா ?

எவரை நம்புவது?

"இந்த விஷயத்தில் ரஷ்யாவும் அதன் நண்பர்களும் கூறுவதையுமோ, அல்லது அமெரிக்காவும் அதன் நண்பர்களும் கூறுவதையுமோ நாம் ஏற்பதற்கில்லை. நமக்கு உண்மைகள் தெரியவேண்டும்"

தென்னப்பிரிக்க நிறவெறி போக்கு!

மேலும் பலர் கைது

ஜோகன்ஸ்பர்க், டிச. 13—

'தேசத் துரோகக் குற்றம்' சாட்டப்பட்டு இன்று மேலும் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் மொத்தம் 160 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு உதவி புரிய ஒரு நிதி திரட்டப்படுகிறது.

அவர்கள்மீது தொடரப்படும் வழக்குகளில் கலந்து வாதம் புரிந்து, அவர்களின் சட்டரீதியான விடுதலைக்குப் பாடுபட சர்வதேச வக்கீல் சங்கம் முனைந்துள்ளது.

டர்பனைச் சேர்ந்த இந்தியர்களான நாயக்கரும், தேபி சிங்கும் இன்று கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. கைது செய்யப்பட்ட அனைவருக்கும் ஜாமீன் மறுக்கப்பட்டுள்ளது.

பழங்களைப் பதனிடும் தொழில் அபிவிருத்தி

அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, டிச. 14—

நாட்டில் பழங்களைப் பதனிடும் தொழில் அபிவிருத்திக்கு உதவியளிப்பதற்காக சென்ற இரண்டாண்டுக் காலத்தில் மொத்தம் ரூ 7-இலட்சம் அனுமதிக்கப்பட்டதாம்!

டின்களில் அடைக்கப்பட்ட பழங்களின் உற்பத்தி 1954-ல் சுமார் 11,541 டன்னுக இருந்தது; 1955-ல் அது சுமார் 14,061 டன்னுக அதிகரித்ததால்!

'இத்துறையில் 'லைசென்சு' பெற்றுள்ள தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை, 1954-ல் 662 ஆக இருந்தது 1956-ல் 718 ஆக அதிகரித்தது என்று மக்கள் சபையில் விவசாய அமைச்சர் கூறியுள்ளார்.

மாஸ்கோ எஜமானர்களைக் காப்பாற்ற நினைக்கும்

கம்யூனிஸ்டுகள் முகத்தில் கரி

'ஹங்கேரிப் புரட்சி தேசீய எழுச்சியே'

'ரஷ்யத் தலையீட்டிற்கு நியாயமே இல்லை'

பண்டிதரின் விசேடத் தூதுவர் தகவல்

"ஹங்கேரிச் சம்பவங்களின் போது 25,000 ஹங்கேரியரும், ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த 7,000 ரஷ்யர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர்,

"ஹங்கேரித் தலைநகரான புதா பெஸ்டில் நிலவும் சூழ்நிலைகள்-காட்சிகள் எல்லாம், இந்தியாவில் சட்ட மறுப்புக் காலத்தில் நிலவியதும் நிலைகள் காட்சிகள் போன்று இருக்கின்றன.

"ஹங்கேரியில் நடைபெற்ற புரட்சி நிச்சயமாக மகத்தானதோர் தேசீய எழுச்சியே! அந்த மக்கள் இயக்கத்தில், புதாபெஸ்ட் தொழிலாளர்கள், மாணவர்கள் எல்லாம் மிகப் பெரும்பாலான அளவில் கலந்துகொண்டிருக்கின்றனர்; இது தான் அடிப்படையான உண்மை.

"பிற்போக்கு சக்திகள் அல்லது எதிர்ப் புரட்சி சக்திகள் என்றழைக்கப்படுபவையும், வெளியிலிருந்து வந்த சில தீய சக்திகளும் இந்த தேசீயப் புரட்சியில் கலந்திருக்கலாம்; ஆனல், அந்த சக்திகள் அற்ப சொற்பமானவைதான்!

"ஒப்பந்தப்படி கூட அல்ல,—ரஷ்யத் துருப்புகள் ஹங்கேரியில் தலையிட்டது; ஹங்கேரி சர்க்காரைக் கவிழ்க்க எவரும் முயற்சிக்கவில்லை. எனவே, ரஷ்யாவின் தலையீட்டிற்கு எந்தவித நியாயமும் இல்லை என்பது தெளிவு

"எனவே, உடனடியாக ரஷ்யத் துருப்புகள் ஹங்கேரியிலிருந்து வெளியேறியாக வேண்டும்."

"இவை, நேருவின் பிரத்தியேகத் தூதுவர்களாக ஹங்கேரி சென்றுள்ள—ரஷ்யாவில் இந்தியாவின் தூதுவரான கே. பி. எஸ் மேனன், மற்றும் கோல்சா ஆகியோர் பண்டித நேருவுக்கு அனுப்பியுள்ள தகவல்களாகும்.

இவற்றை, பண்டித நேருவே மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

'கர்த்தால்'

புதாபெஸ்டிலும், இதர ஹங்கேரி நகரங்களிலும் இப்போது நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தை 'கர்த்தால்' என்று ஹங்கேரி மக்கள் கூறுகிருர்களாம்!

இதனை கே. பி. எஸ். மேனன் தெரிவித்திருப்பதாக பண்டித நேரு தெரிவித்திருப்பதுடன், 'இது, இந்தியாவில் வழங்கப்படும் 'ஹர்த்தால்' என்ற சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டதா என்பது தமக்குத் தெரியாது என்றும் பண்டிதர் கூறியிருக்கிருர்.

அழிவுகள்

புதாபெஸ்ட்நகர் இப்போது யுத்தகாலத்தில் அழிக்கப்பட்ட நகரங்களைப் பார்ப்பதுபோன்றிருப்பதாகவும் பண்டிதர் கூறியிருக்கிருர்.

தி. மு. கழகத் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

★

வேலூர் :

நேஷனல் தியேட்டரில்

16-12-56 காலை 10-மணிக்கு

தலைவர் : எம். பி. சாரதி எம்.சி.

அண்ணு

என். வி. நடராசன்

ஆகியோர் பேசுவர்

★

கோவில்பட்டி :

பாப்புலர் டாக்கீசில்

16-12-56 காலை 10-மணிக்கு

இரா. நெடுஞ்செழியன்

எம். ஜி. இராமச்சந்திரன்

பேசுவர்.

★

தூத்துக்குடி :

டேல்பின் தியேட்டரில்

16—12—56 மாலை 4-மணிக்கு

இரா. நெடுஞ்செழியன்

எம். ஜி. இராமச்சந்திரன்

பேசுவர்.

துறையூர் :

பாரதி தியேட்டரில்

17—12—56 காலை 9-மணிக்கு

தலைவர் : டி. பி. அழகமுத்து

இரா. நெடுஞ்செழியன்

'சங்க கால அரசியல்'

எம். ஜி. இராமச்சந்திரன்

'கலையும் கழகமும்'

என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

நாமக்கல் :

ராஜா டாக்கீசில்

17—12—56 மாலை 3-மணிக்கு

தலைவர் : பெருமாள்

இரா. நெடுஞ்செழியன்

எம். ஜி. இராமச்சந்திரன்

பேசுவர்.

உணவுப் பொருள் மீது கட்டுப்பாடு

'ஆந்திராவில் இல்லை' என்கிருர் முதன் மந்திரி

ஐதராபாத், டிச. 13—

பல தீய விளைவுகளை உண்டுபண்ணும் என்பதால், மாநில சர்க்கார உணவுப் பொருள்கள் மீது கட்டுப்பாடு விதிக்கப் போவதில்லை,' என்று ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிருர்.

உணவுப் பொருள் விலை ஏற்றம் தற்காலிகமானதுதான் என்றும், இன்னும் பதினைந்து நாட்களில் விலைகள் இறங்கிவிடும் என்றும் அவர் கூறினுராம்.

இப்போது நெல் அறுவடை, ஆந்திரப்பிரதேசம் முழுவதும் வெகு நன்ருக இருப்பதாகவும், டில்லியிலிருந்து அரிசி கேட்கத் தேவையில்லை என்றும் அறுவடை சீக்கிரமே 'மார்க்கெட்'டிற்கு வந்துவிடும் என்றும், மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைக்கும் பொருட்டு சர்க்கார் ஏற்கனவே தாங்கள் வசமுள்ள அரிசியை மார்க்கெட்டிற்கு அனுப்பியிருக்கின்றனர் என்றும் பத்திரிகையாளரிடம் பேசிய சஞ்சீவரெட்டி தெரிவித்திருக்கிருர்.

1,66,500 டன் பர்மா அரிசி இறக்குமதி

புதுடில்லி, டிச. 11—

1956 சனவரியிலிருந்து அக்டோபர் வரையில் மொத்தம் ரூ. 8,69,90,000 மதிப்புள்ள 1,66,500 டன் அரிசி பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக உணவு அமைச்சர் ஜெயின் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

'சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும்'

வெளிநாட்டு மாணவர்களுக்கு எச்சரிக்கை

அண்ணமலைநகர். டிச. 12—

'இந்திய அரசாங்கத்திடமிருந்து உதவிச் சம்பளம் பெற்று கல்வி பயில வந்துள்ள வெளிநாட்டு மாணவர்கள், இந்த மாநிலத்தில் அமுலிலிருக்கும் மதுவிலக்குச் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கவேண்டும்; மீறி நடப்பவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும், 'உதவி சம்பளத்தையும் ரத்து செய்ய நேரிடும் என்றும் அண்ணமலைப் பல்கலைக் கழக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

மாநிலங்களுடன் கடிதப் போக்குவரத்து

'இந்தி மொழி பெயர்ப்பும்' அனுப்பப்படுகிறதாம்

புதுடில்லி, டிச. 13—

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கும் மாநிலங்களுடன், டில்லிப் பேரரசு ஆங்கிலத்திலேயே இன்னும் கடிதப் போக்கு-வரத்து வைத்துக்கொண்டிருக்கிறது என்ருலும், இந்தி மொழி பெயர்ப்பும் ஒவ்வொரு கடிதத்துடனும் அனுப்பப்படுவதாக உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

பீகார், உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுடனும், மத்தியப் பிரதேசம், மத்திய பாரதம், விந்தியப் பிரதேசம் ஆகிய முன்னுள் மாநிலங்களுடனும் இதுபோன்ற இந்தி கடிதப் போக்கு-வரத்து நடத்தப்படுகிறதாம்.

ஐ. நா. நிறுவனத்தில் ஜப்பான் இடம் பெற்றது!

ஐ. நா. நிறுவனத்தில் ஜப்பான் இடம் பெற்றுவிட்டது; ஜப்பானைச் சேர்த்து ஐ. நா.-வில் இப்பொழுது 80 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் உருவச்சிலை பயிற்சி நிலையம்

அழகான விளக்குத் தண்டுகள், பூப்பரணிகள், உருவச் சிலைகள் முதலியன செய்யும் தொழிலில் வார்ப்பு செதுக்குதல், மெருகிடுதல் ஆகிய வேலைப்பாடுகளை மேலும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலையில் ஒரு பயிற்சி நிலையம் நிறுவும் திட்டமொன்றை சர்க்கார் அங்கீகரித்துள்ளது; டில்லிப் பேரரசு இதற்காக ரூ. 31,460 மானியம் வழங்கியுள்ளது.

ஆண்டுதோறும் 15 பேருக்கு இந்நிலையத்தில் பயிற்சியளிக்கப்படும்; மாதம் ரூ. 30 உதவிச் சம்பளம் கொடுக்கப்படும்.

ஐந்தாண்டு காலத்துக்கு இந்நிலையம் சென்னை அரசாங்கத்தால் நடத்தப்பட்டு, பிறகு தொழில் கூட்டுறவு நிலையமாக மாற்றப்படும். இதற்காக ஆகும் முதலீட்டுச் செலவு ரூ. 8,175; ஆண்டுதோறும் ஆகும் செலவு ரூ. 28,685.

குடந்தையில் பட்டு உற்பத்தி நிலையம்

நகரில் பட்டு உற்பத்தி[illegible] அதிகரிக்க மத்திய அரசா[illegible] உதவியுடன் ஒரு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு, ஆண்டிற்கு ரூ. 1-இலட்சத்திற்கு மேல் செலவிடப்படுமாம்,

மெஹ்பூப் நகர் இரயில் விபத்து

மேலும் விசாரணை நடக்குமாம்

புதுடில்லி, டிச. 13—

மெஹ்பூப் நகர் இரயில் விபத்து பற்றி மேற்கொண்டு விசாரணை நடத்துவதற்காக இந்திய அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமித்திருப்பதாக இரயில்வே இலாகா அறிக்கையொன்று கூறுகிறது.

இந்த விபத்து செப். 12-ம் தேதியன்று நடைபெற்றது.

1,300 ஆசிரியர்களின் பரிதாப நிலைமை

ராஜ்காட், டிச. 14—

சௌராஷ்டிரப் பகுதியில் பணிபுரியும் 1300 ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதச் சம்பளம் இதுவரையிலும் தரப்படவில்லை என்றும், இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்றும் பம்பாய் அரசாங்கத்திடம் ஆசிரியர்களின் பிரதிநிதியொருவர் முறையிட்டுள்ளாராம்.

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் ஜுகாவ்

ஜன. 26-ல் இந்தியா வருகை

புதுடில்லி டிச. 14—

சென்ற ஆண்டில் ரஷ்யா சென்றிருந்தபோது, பண்டித நேரு ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் ஜுகாவை இந்தியாவுக்கு வருமாறு அழைத்திருந்தாராம்.

அழைப்பை ஏற்றுக்கொண்ட அவர், வரும் சனவரி திங்கள் 26-ம் தேதியன்று மார்ஷல் ஜுகாவ் இந்தியா வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதாம்.

பெரும்பாலோர் கருத்தை சர்க்கார் ஏற்றதாம்!

புதுடில்லி, டிச. 12—

ஷா நவாஸ்கான் தலைமையில் நியமிக்கப்பட்ட சுபாஷ் சந்திர போஸ் விசாரணைக் குழுவின் பெரும்பான்மையோர் அறிக்கையை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாகவும், தனி நபரின் ஆட்சேபணைக் குறிப்பை அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் மாநிலங்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பண்டித நேரு கூறியுள்ளார்.

சென்னை கவின்கலை மன்றச் சிறப்புக் கூட்டம்

தோழர் மு. கருணாநிதி கலந்துகொள்வார்

16-12-56 மாலை 5 மணிக்கு, சென்னை வண்ணை தியாகராயர் கல்லூரிக் கவின்கலை மன்றச் சார்பில் திரு. மா. கி. சண்முகம் தலைமையில் நடைபெறும் சிறப்புக் கூட்டத்தில், 'கலையும் வாழ்வும்' என்ற தலைப்பில் தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றுவார்.

காங்கிரஸ் ஆட்சியில் அரசியல் கைதிகள் நிலை

சிறையில் 190 சோஷலிஸ்டுகள் உண்ணாநோன்பு

பாட்னா, டிச. 12—

சிறையில் வைக்கப்பட்டுள்ள சோஷலிஸ்டுக் கட்சித் தொண்டர்களுக்கு மோசமான உணவு கொடுக்கப்படுவதையும், மனிதத் தன்மைக்கு மாறாக அவர்கள் நடத்தப்படுவதையும் கண்டித்து, 190 சோஷலிஸ்டுகள் சிறையில் ஒரு நாள் உண்ணாநோன்பு மேற்கொண்டதாகத் தெரிகிறது.

சென்ற சனிக்கிழமை முதல் இராமநாத் என்பவர், தங்களை அரசியல் கைதிகளாக மதித்து நடத்தவேண்டும் என்று கோரி தொடர்ந்து உண்ணாமல் இருந்து வருகின்றார் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

இதற்கென ஒரு மசோதா!

புதுடில்லி, டிச. 14—

'மதத் தலைவர்களை அவதூறு செய்வதையும், அவமரியாதை செய்வதையும் தடுக்கவேண்டும்' என்று கோரும் ஒரு தனிநபரின் மசோதா மக்கள் சபை விவாதத்திற்கு வந்துள்ளது.

திருப்பதியில் தொழில் நுணுக்கக் கல்வி நிலையம்

அடுத்த கல்வி ஆண்டு முதல் இங்கு பல துறைப்பட்ட தொழில் நுணுக்கக் கல்வி நிலையம் ஒன்று திறக்கப்படும் என்று, ஆந்திர மாநில கல்வி அதிகாரி அறிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

கண்டரமாணிக்கம் :
வள்ளுவர் திடலில்
16—12—56 மாலை
தலைவர் : இளமதி
பேசுபவர் : கண்ணதாசன்

★

எம். சூரக்குடி :
கச்சேரி மைதானத்தில்
17—12—56 மாலை
தலைவர் : எஸ். மெய்யப்பன்
பேசுவோர் :
கண்ணதாசன்
என். பழநியப்பன்

★

சதுர்வேதமங்கலம் :
காந்தி சதுக்கத்தில்
18—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : மு. அ. ந. அழகு
பேசுபவர் : கண்ணதாசன்

★

விருதம்பட்டு:
16—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
தலைவர் : தேசியமணி-கண்ணன்
பேசுவோர்:
சத்தியவாணி-முத்து
துரையம்மாள் - சிவப்பிரகாசம்
ஆர். எஸ். தாமரைச்செல்வி
ஜி. பி. அமுதா
பி. சற்குணம்

குறிப்பு:—கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வழங்கப்படும்.

நேருவின் கலையறிவு

புதுடில்லி, டிச. 12—

"உயர்ந்த ரக இந்திய சங்கீதம் கேட்க நன்றாகத்தான் உள்ளது; ஆனால் அது எனக்கே புரியவில்லை,' என்று பண்டித நேரு, வெளிநாடுகளுக்கு கலாச்சாரக் குழு அனுப்புவது பற்றிப் பேசுகையில குறிப்பிட்டுள்ளார்.

20 ஆண்டுகளுக்குமுன் நாட்டியமும், நாடகமும் கலந்த தென்னிந்தியக் 'கதகளி'யைக் கண்டு திகைத்து ஆச்சரியமடைந்ததாகவும், ஆனால் அதைத் தொடர்ந்து பார்த்தபின் பின்னர், அதிலுள்ள கலை நுணுக்கத்தைக்கண்டு, அக்கறையுடனும் ஆவலுடனும் அதை அனுபவித்ததாகவும் குறிப்பிட்டதுடன், இந்தியாவில் தனக்குப் பிடித்த இந்திய நடனங்களில் 'கதகளி'யும் ஒன்றாகும் என்று கூறியுள்ளார்.

சிறைக் கைதிகளுக்கு……

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆண்டு திட்டத்தை சிறை அதிகாரிகள் அமுல் செய்வர் என்றும் தெரியவருகிறது.

கம்பியில்லாத் தந்தி

நீண்டகால தண்டனை அனுபவிக்கும் கைதிகள், சிறைகளுள் கம்பியில்லாத் தந்தி வசதிகள் வைத்துக்கொள்ளலாம் என்றும், அவர்கள் இயந்திரத்தினைத் தங்கள் நண்பர்கள் மூலமோ, அல்லது தாங்கள் சிறையில் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டோ வாங்கிக்கொள்ளலாம் என்றும் சிறை அதிகாரிகள் தங்களின் ஆண்டறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு :		ரூ. அ. பை
முன் (14—12—56) இதழ்ப்படி.	....	8,272-12—9
சென்னை நண்பர்கள் கழகம 2-வதுமுறையாக என். வி. நடராசன் மூலம்	....	50—0—0
இரா. சு. ராசன்-கொல்லுமாங்குடி	....	1—0—0
சி. சென்னியப்பன்-திருப்பூர்	....	2—0—0
எ. முனுசாமி-உதகை	....	10—0—0
வே. செல்லையா-சிம்மக்கல்-மதுரை	....	1—0—0
கழக ஆதரவாளர் 9-வது வட்டம்-சென்னை	....	3—0—0
சென்னை-பெரியமெட்டு வ. உ. சி. இளைஞர் மன்றப் பொதுக்கூட்டம்-பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மூலம்	....	75—0—0
ஈரோடு தி. மு. கழகத் தோழர்கள் தோழர் ஈ. வெ. கி. சம்பத் மூலம்	....	19—0—0
இலக்குமணநாயக்கன்பட்டி தி. மு. க.	....	25—0—0
பூவிருந்தவல்லி தி. மு. க.-மாணவர் கிளை பொதுக்கூட்டம் மு. கருணாநிதி மூலம்	....	300—0—0
ஆர். சுப்பையா-பெங்களூர்	....	20—0—0
என். இராசு-உதகை	....	10—0—0
பி. நாராயணன்-தி. மு. க. உடுமலை	....	5—0—0
வி. சங்கரன்-பொம்மன்பள்ளி	....	8—0—0
எஸ். பாலு-கோட்டநகர்	....	6—0—0
டி. எம். பாண்டுரங்கம்-விழுப்புரம்	....	2—0—0
தாமஸ்-வீரடிப்பட்டி-தஞ்சை மாவட்டம்	....	0—8—0
ஆக மொத்தம் ரூ.		8,810—4—9

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"17—12—56 மாலை 3 மணி அளவில், சேலம் வெங்கடப்ப செட்டியார் ரோடிலுள்ள (சென்டிரல் டாக்கீசுக்கு எதிரில்) மாவட்டக் கழக அலுவலகத்தில் சேலம் மாவட்டக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்," என்று, சேலம் மாவட்டத் தி. மு. கழகத் துணைச் செயலாளர் ப இராமலிங்கம் அறிவிக்கிறார்.

மாயூரம் நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

16—12—56 இரவு 8-30 மணி அளவில், மாயூரம் பெரிய கடை வீதி, தோழர் எஸ். என். குருமூர்த்தி கடை மாடியில் நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

ஆரணி அண்ணா நாடக மன்றம்

16—12—56 இரவு பொன்னேரி வட்டம் ஆரணி பெருமாள் கோவிலருகில் மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் பா. சு. மணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோ. வெற்றிவீரன், கா. மு. உமர், கா. நெடுமாறன் ஆகியோர் பேசுவர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

டிச 16 : சேலம்
17 : இராணிப்பேட்டை
22 : கல்லாத்தூர்
23 : குடந்தை
24 : சென்னை
25 : பிரம்மபுரம்
29, 30 : சேலம்

தேர்தல் நிதி தாரீர்!

★

சென்னை—சூளை தி. மு. க. தோழர்கட்கு :

16-12-56-ல், சென்னை—சூளை தி. மு. கழகத் தோழர்கள் மாறு வேடமணிந்து, வட்டப் பகுதியில் ஊர்வலமாக வந்து தேர்தல் நிதி வசூலிப்பார்கள். கழகத் தோழர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

★

சென்னை 10-வது வட்டத் தி. மு. கழகத் தேர்தல் நிதி ஊர்வலம்

16—12—56 காலை 9 மணியளவில், தோழர் மாறன் முன்னிலையிலும், தோழர் எஸ். எஸ் தென்னரசு தலைமையிலும், பிரபாத் டாக்கீஸ் அருகிலுள்ள சண்முகராயன் சந்து தோழமைக் கழகத்திலிருந்து பாண்டு வாத்தியங்கள் முழக்க முக்கிய வீதிகளில் தி. மு. கழகத் தேர்தல் நிதி ஊர்வலம் நடைபெறும் தோழர்கள் ஏ. எஸ். வேணு, சொர்ணம், மற்றும் பலர் கலந்துகொள்வர்.

★

சென்னை 4-வது வட்டத் தோழர்கட்கு :

16—12—56 காலை 10 மணிக்கு சென்னை 4-வது வட்ட அண்ணா படிப்பகச் சார்பில், படிப்பகத் தோழர்கள் தேர்தல் நிதி திரட்ட இருப்பதையொட்டி, அன்று குறிப்பிட்ட நேரத்தில் தோழர்கள் அனைவரும் படிப்பக மனைக்கு வந்துசேருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

★

சென்னை 35-வது வட்டத் தோழர்கட்கு :

16—12—56 காலை 8 மணி முதல் மாலை 8மணிவரை, மேற்படி வட்ட தி மு. கழகத் தோழர்கள் உண்டியலேந்தி தேர்தல் நிதி திரட்ட வருவர். கழகத் தோழர்களும் அனுதாபிகளும் பொது மக்களும் தாராளமாக நிதி உதவுமாறும் கழக உறுப்பினர்களனைவரும் அன்று காலை 8-மணிக்குள் கழக இல்லத்தில் வந்திருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த ஆண்டில்!

★

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் நடிக்கும்

சந்திரமோகன்

10—1—57 மாலை 6-மணிக்கு

★

* பிரபல நாடகங்கள் * சிறந்த நடனங்கள்
* ரேக்ளா பந்தயங்கள் * இலவச துணைக்காட்சிகள்
* கதம்ப நிகழ்ச்சிகள் * தேர்ந்த ஆட்டங்கள்
* கவர்ச்சிகரமான விளையாட்டுப் பந்தயங்கள்
* கலைக்காட்சிகள் — இத்தனையும்

பார்க்பேர் — கண்காட்சியில் உண்டு

★

எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
23—12—56-ல் துவக்கம்

கண்காட்சியில் பணியாற்றப் பெண்கள் தேவை

எம். எஸ். மோகன்—காண்ட்ராக்டர்

****

கிளைக் கழக நிர்வாகிகளுக்கு முக்கிய வேண்டுகோள்

★

பொதுச்செயலாளரின் அறிக்கைக்கேற்ப, 10—12—56 முதல் தேர்தல் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகளும், இதுவரை வசூலித்த தொகையை உடனே தலைமை நிலையத்திற்குத் தவறாது அனுப்பி வைக்க வேண்டுவதுடன், மேலும் 16—12—56 வரை வசூலிக்கும் தொகையையும் தாமதிக்காமல் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மாவட்டச் செயலாளர்களும இதுகுறித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.